
# எம்பயர் டிரெஸ்

*எங்க ஸ்டெப்-பை-ஸ்டெப் டுடோரியலை ஃபாலோ பண்ணி ஸ்டைலிஷ் எம்ப்யர் டிரெஸ்ஸ தைச்சுக்கோங்க.*








**தேவைப்படும் பொருள்கள்**

60 அங்குலம் அகலம் உள்ள டிரெஸ்க்கு 3 மீட்டர் துணி
எம்பயர் டிரெஸ் டெம்ப்ளேட்ட நீங்க எங்க www.ushasew.com வெப்சைடிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்.
சாக்
கத்தரிக்கோல்
மணிகோர்த்த பின்ஸ்
ஸ்கேல்
மெஷரிங் டேப்
மெஷரிங் த்ரெட்
8 அங்குல கன்சீல்டட் ஜிப்பர்
உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்
உஷா ஜானோம் கேதரிங் ஃபூட்
உஷா ஜானோம் பைப்பிங் ஃபூட்
5 மீட்டர் நீங்கள் விரும்பும் எம்பெலிஷிங் லேஸ்

இந்த டுடோரியல்ல டெம்ப்ளேட்படி துணிய எப்படி கட் பண்றதுன்னு நாம கத்துப்போம். அப்பர் டார்சோ பீசஸ். முன், பின் பீசஸ இணைக்கறது, நெக்லைன் ஃபினிஷ் பண்றது, ஸ்லீவ்ஸ அட்டாச் பண்றது, ஸ்கர்ட் போர்ஷனை தயாரிக்கறது, சைட் சீம்ஸ தைக்கறது, ஜிப்பர் அட்டாச் பண்றது அப்புறம் ஸ்லீவ்ஸயும், பாட்டம்லயும் லேஸ் அட்டாச் பண்றது எல்லாத்தையும் கத்துப்போம்.

**ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங் & துணி கட்டிங்**













துணிய முழுசா விரிங்க. பாட்டமிலிருந்தும், டாப்பிலிருந்தும் அகலவாக்குல டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி மடியுங்க. இது துணியோட ராங்-சைட், இது துணியோட ரைட் சைட்.

துணியோட கீழ் பாதியில முன்பக்க டெம்ப்ளேட்ட இதுல காட்டியிருக்க மாதிரி வையுங்க. துணில டெம்ப்ளேட்ட பின் பண்ணுங்க. துணியின் எல்லா லேயர்ஸ்லயும் பின் நுழையறதை உறுதி செய்துக்கொங்க முன்பக்க டெம்ப்ளேட்ட துணியின் மடிப்புல வைக்கப்பட்டு இருக்கறதை நீங்க பாக்கலாம்.

இப்ப சாக் பீசால டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. வளைவுகளுக்கு போகறப்ப கவனமா இருங்க, கை ஆடாம இருக்கறது அவசியம். மொத்த டெம்ப்ளேட்டயும் ட்ரேஸ் பண்ணின பிறகு பின்-அ நீக்கிருங்க. டெம்ப்ளேட்ட தனியா வைச்சிருங்க, கட் பண்றப்ப லேயர்ஸ் நழுவிடாம இருக்க துணிய மறுபடியும் பின் பண்ணுங்க. ட்ரேஸ் பண்ணின லைனை கவனமா கட் பண்ணுங்க, இப்பவும் வளைவுகள் வர்றப்ப மெதுவா, கவனமா இருந்து சரியான முன்பக்க பீஸ் வர்றதை உறுதி செய்துக்கணும். முன்பக்க பீஸ நீக்கிட்டு அதை தனியா வையுங்க.

இப்ப பின்பக்க டெம்ப்ளேட்ட இதுல காட்டியிருக்க மாதிரி துணியோட டாப் மடிப்புல வைச்சு மடிப்புல கரெக்ட்டா இருக்கறதை உறுதி செய்யுங்க.





முன்பக்க டெம்ப்ளேட்டின் அதே ஸ்டெப்ஸ இதுக்கு ரிபீட் பண்ணுங்க. பின்… ட்ரேஸ்… அப்றம் கட். பின் பக்க பீசையும் தனியா வையுங்க.








இப்ப நாம ஸ்கர்ட் கட் பண்ணுவோம். மறுபடியும் துணிய விரிச்சு இதுல காட்டி இருக்க மாதிரி பாதியா மடிங்க. இப்பவும் ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்கு. ஒரு ரூலரை எடுத்துகிட்டு துணியின் அகலம் முழுசும் ஒரு நேர்கோட்ட வரையுங்க. நேர்கோட்டிலிருந்து 28 அங்குலம் அளந்து மார்க் பண்ணுங்க. குறிப்பிட்ட இடைவெளிகள்ல 28 அங்குலம் மார்க் பண்ணுங்க இது நமக்கு ஒரு நேர்கோடு வரைய உதவும். இப்ப ரூலரை வைச்சிகிட்டு ஒரு நேர்கோடு போடுங்க. லைன்ஸ கட் பண்ணுங்க. கட் பண்றப்ப துணியோட ரெண்டு லேயர்ஸயும் கட் பண்றோமான்னு நிச்சயம்செய்துக்கொங்க. ஸ்கர்ட்க்கு 2 பீசஸ் துணி தேவை, இதே மாதிரி இன்னொரு பீஸ் கட் பண்ணுங்க.


இப்ப ஸ்லீவ்ஸ வேலைய பாக்கணும். மீதி உள்ள துணிய எடுத்துகிட்டு ஸ்லீவ் டெம்ப்ளேட்ட அது மேல வையுங்க. துணில டெம்ப்ளேட்ட வைச்சு பின் பண்ணுங்க. துணியின் ரெண்டு லேயர்ஸ்லயும் பின் நுழையறதை உறுதி செய்யுங்க. இப்ப டெம்ப்ளேட் அவுட்லைனை சாக் வைச்சு ட்ரேஸ் பண்ணுங்க. டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துட்டு டெம்ப்ளேட்ட தனியா வைச்சிருங்க. கட் பண்ணும்போது துணி உறுதியா நிக்க தேவைப்பட்டா மறுபடியும் பின்பண்ணுங்க. மார்க் பண்ணின லைன்ஸ்ல கட் பண்ணுங்க. இந்த கட்டிங்க ரொம்ப முக்கியம் ஏன்னா இதுதான் உங்க டிசைனை அற்புதமா மாத்தும் இல்லாட்டி சொதப்பிரும்.








நமக்கு நெக்லைனுக்கு ஒரு பயாஸ் ஸ்ட்ரிப் தேவை. மீதி உள்ள துணிய எடுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்கேலை 45 டிகிரி கோணத்தில வையுங்க. சாக் வெச்சு ஒரு நேர்கோடு வரைங்க. இப்ப வரைஞ்ச லைன்லேந்து 1½ இன்ஞ்ச் அளந்து பாயின்ட் மார்க் பண்ணுங்க. துணில பல்வேறு புள்ளிகள்ல 1½ இன்ஞ்ச் மார்க் பண்ணுங்க, இதெல்லாம் நமக்கு நேர்கோடு வரைய உதவும். இது முடிஞ்சதும், ஸ்கேலை எடுத்துகிட்டு மார்க் பண்ணின பாயின்ட்ஸ ஜாயின் பண்ண ஒரு லைன் வரைங்க. கத்தரிக்கோலால ஸ்ட்ரிப்ப கட் பண்ணுங்க. நமக்கு ஒரே ஒரு ஸ்ட்ரிப்தான் தேவை அதனால நாம துணில ஒரே ஒரு டாப் லேயர்தான் கட் பண்றோம்.

## ஸ்டெப் 2 அப்பர் டார்சோ பீசஸ் தயாரித்தல்










முன், பின் பீசஸ்க்கு நமக்கு டார்ட்ஸ் தேவைப்படும். முன்பக்க பீசை எடுத்து அதை விரியுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி முன்பக்க பீசின் ரைட் சைட்ல டெம்ப்ளேட்ட வையுங்க. இப்ப டெம்ப்ளேட் அடிப்பக்கத்துல ரெண்டு நோட்சஸாவும் நோட்சுக்கு மேல ஒரு பாயின்டாவும் இருக்கறதை நீங்க பாக்கலாம். மூணு பாயின்ட்சயும் மார்க் பண்ணுங்க. இப்ப டெம்ப்ளேட்ட ஃபிளிப் பண்ணிட்டு அதை இடது பக்கம் வையுங்க அப்றம் மறுபடியும் இந்த மூணு பாயிட்சயும் மார்க் பண்ணுங்க. டெம்ப்ளேட்ட ரிமூவ் பண்ணுங்க. ஸ்கேலையும் சாக்கையும் எடுத்துட்டு உள்ள ரெண்டு நோட்சசையும் நடு பாயின்டோட ஜாயின் பண்ணுங்க. இன்னொரு பக்கத்துலயும்கூட இந்த பாயின்ட்ஸ ஜாயின் பண்ணுங்க. இந்த மார்கிங்ஸ் ஒரு டாட் கிரியேட் பண்ண உதவும். அது எப்படின்னு நாம கொஞ்சம் நேரத்தில பாக்கலாம். இப்ப நாம இதே புரொசீஜரை பேக் பீஸ்க்கும் ரிபீட் பண்ணனும். இதுல காட்டியிருக்க மாதிரி பின் பக்க டெம்ப்ளேட்டயும் துணி மேல வையுங்க. பாயின்ட்ட மார்க் பண்ணுங்க. டெம்ப்ளேட்ட இன்னொரு பக்கம் ஃபிளிப் பண்ணிட்டு மார்க் பண்ணுங்க. இது முடிஞ்சதும், பாயின்ட்ஸ ஜாயின் பண்ணுங்க






கடைசியா இப்ப தைக்க வேண்டிய நேரம். ரெண்டு 2 பீசஸயும் உஷா ஜானோம் ட்ரீம் மேக்கர் 120 தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. முதல்ல முன்பக்க பீஸ பாக்கலாம். ரெண்டு நோட்சசையும் ஜாயின் பண்ணி அப்பர் பாயின்ட்ல பின் பண்ணுங்க. இந்த லைன் மேல தைப்போம். பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அட்ஜஸ்ட் பண்ணிக்கணும். மிஷின நேர் தையலுக்கு செட் பண்ணிகிட்டு தையல் நீளத்தை 2.5 க்கு அதிகரிக்கணும். தைக்க தொடங்க ஸ்டார்ட்ட பிரஸ் பண்ணனும். தொடக்கத்தில ரிவர்ஸ் ஸ்டிச் போடணும். பாயின்டிலிருந்து தொடங்கி இதுல காட்டி இருக்க மாதிரி நோட்ச் வரை தையுங்க முடியற இடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போடணும். நூலை கட் பண்ணுங்க. இப்ப நாம முன்பக்க பீஸ்ல ஒரு டார்ட் தைச்சிட்டோம். இன்னொரு டார்ட்டுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. முன்பக்க துணிக்கு டார்ட்ஸ் தயார்.




இப்ப பின்பக்க பீஸ பாக்கலாம். முன்பக்க பீஸ் மாதிரியே நோட்சசையும் ஜாயின் பண்ணி, வலது, இடது பக்கத்துக்கு லைன் மேல தைக்கணும். டார்ட்ஸ் பாக்க இப்படித்தான் இருக்கும்.

## ஸ்டெப் 3 ஷோல்டரை தைக்கறது மூலம் முன், பின் பக்க பீசஸ ஜாயின் செய்தல்.




இதுல காட்டியிருக்க மாதிரி பின்பக்க பீஸ முன் பீஸ்க்கு மேல வையுங்க. ரைட் சைட் ரைட்ல பாத்துட்டு இருக்கணும். ஷோல்டரை சரியா மேட்ச் பண்ணி அவற்றை ஒன்றா இணைக்கணும். இப்ப நாம பின் பண்ணின ஷோல்டர்ஸ தைக்கணும்.




தையல் மிஷினுக்கு துணிய கொண்டு போங்க. பின் பண்ணின ஷோல்டரை பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில வைச்சு தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்துலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. ஒரு சின்ன ஸ்டிச் லைனா இருநதாலும் துணிய ஒன்றா வைச்சிருக்க ரிவர்ஸ் ஸ்டிச் தேவை. நூலை கட் பண்ணிகிட்டு இதையே இன்னொரு ஷோல்டருக்கு ரிபீட் பண்ணுங்க. ஷோல்டர் ஸ்டிச் பாக்க இப்படித்தான் இருக்கணும்.










## ஸ்டெப் 4 நெக்லைனை முடித்தல்

இதுல காட்டியிருக்க மாதிரி துணிய விரிங்க. நெக்லைனை முடிக்க பயாஸ் ஸ்ட்ரிப்-அ அதோட அட்டாச் பண்ணப்போறோம். தைக்க ஆரம்பிக்கலாம். பயாஸ் ஸ்ட்ரிப்-அ பாதியா மடிங்க. மடிச்ச பயாஸ் ஸ்ட்ரிப்-அ இதுல காட்டி இருக்க மாதிரி நெக்லைனுக்கு ரைட் சைட் மேல வைங்க. ஆரம்பத்தில நாம  பயாஸ் ஸ்ட்ரிப்-ல சுமார் ஒரு அங்குலம் விட்டுட்டு தைக்க ஆரம்பிங்க. பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு ஷோல்டர் லைன்லேந்து தைக்க ஆரம்பிங்க. தைக்கும்போது கூடுதல் கவனத்தோட இருக்கணும். நிறுத்திட்டு நெக்லைன் முழுசும் பயாஸ் ஸ்ட்ரிப்ப தொடர்ந்து அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு தையுங்க. நெக்லைன் முழுக்க தையுங்க. முடியற இடத்துக்கு பக்கத்தில வந்ததும் நிறுத்துங்க. நாம ஆரம்பத்தில விட்டு தைச்ச பயாஸ் ஸ்ட்ரிப்ப ஞாபகம் இருக்கா அதே மாதிரி ½ இன்ஞ் விட்டுட்டு அதிகப்படியா உள்ள துணிய கத்தரிக்கோலால கட் பண்ணிருங்க. கூடுதல் ஸ்ட்ரிப்ப இதுல காட்டியிருக்க மாதிரி மடிச்சு பயாஸ் ஸ்ட்ரிப்போட இன்னொரு முனைய இந்த மடிப்பு மேல வைச்சு தையுங்க. முடியற இடத்துக்கு வந்த பிறகு நூலை கட் பண்ணுங்க கடைசில நாம விட்ருந்த பயாஸ் ஸ்ட்ரிப்ப ஈசியா கத்தரிக்கோலால கட் பண்ணிரலாம். தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கும். இதுல காட்டி இருக்க மாதிரி எட்ஜுக்கு நோட்சஸ் வைக்கணும்.




ஸ்டிச் லைன்ல கட் பண்ணிராம ஜாக்கிரதையா இருக்கணும். நெக்லைன் முழுக்க  நோட்சஸ் போடுங்க. எம்பயர் டிரெஸ் போட்டுக்கறப்ப நோட்சஸ்தான் நெக்லைன் பக்கமா  படிஞ்சு இருக்க உதவும். இப்ப இதுல காட்டி இருக்க மாதிரி பயாஸ் ஸ்ட்ரிப்ப மடியுங்க.




இப்ப நாம இதுல காட்டியிருக்க மாதிரி பயாஸ் ஸ்ட்ரிப்ப ராங் சைட்-ல அதாவது டிரெஸ்சோட உள்பக்கம் மடிச்சு எட்ஜ்ல தைப்போம். பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அட்ஜஸ்ட் பண்ணி தைக்க ஆரம்பிங்க. நெக்லைன் முழுவதும் மடிப்பு சரியான இடத்தில இருக்கறதை உறுதி செய்துக்கங்க. அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. அவ்ளோதான் முடிஞ்சிருச்சு.





ஒரு நேர்த்தியான நெக்லைன் தைச்சிட்டோம். முடிஞ்ச பிறகு அது பாக்க இப்படித்தான் இருக்கணும்.




## ஸ்டெப் 5 ஸ்லீவ்ஸ் அட்டாச் செய்து ஸ்லீவ் ஹெம் முடித்தல்

மறுபடியும் துணிய விரிங்க. ஸ்லீவ் பீசஸ எடுங்க. இதுல காட்டின மாதிரி ஸ்லீவ் பீசஸ பாதியா மடிச்சு, டாப்ல ஒரு நோட்சு கொடுங்க. ஒரு ஸ்லீவ எடுத்து ஷோல்டர் ஸ்டிச்சோட நோட்ச மேட்ச் பண்ணுங்க. ஸ்டிச் லைன் அப்புறம் நோட்ச அலைன் பண்ணிட்டு ஸ்லீவ இதுல காட்டியிருக்க மாதிரி ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி பின் பண்ணுங்க. ஆர்ம்ஹோலை சுற்றி பின் பண்ணுங்க. அடுத்தப் பக்கத்துக்கும் இதே ஸ்டெப்ப ரிபீட் பண்ணுங்க. நாம ஆர்ம்ஹோலை தைப்போம் அதோட ஸ்லீவயும் ஹெம் பண்ணுவோம்.








பின் பண்ணின துணிய பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில அட்ஜஸ்ட் பண்ணி மெதுவா தைக்க ஆரம்பிங்க. தைச்சிட்டே பின்-அ ரிமூவ் பண்ணுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. இதே மாதிரி இன்னொரு ஸ்லீவயும் தையுங்க. இப்ப ஸ்லீவ் ஹெம் வேலைய பாக்கலாம்.




இதுல காட்டியிருக்க மாதிரி துணிய ரெண்டு தடவை ஒரு அங்குலம் பாதியா மடியுங்க. மடிப்பை பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய வைச்சு ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு தைக்க ஆரம்பிங்க. ஒரு நேர்த்தியான ஸ்லீவ் ஹெம் கிடைக்க நிறுத்தி நிறுத்தி துணிய மடிச்சிகிட்டே இருங்க. ஹெம் பண்ணின ஸ்லீவ் பாக்க இப்படித்தான் இருக்கும். இதே மாதிரி ரெண்டாவது ஸ்லீவையும் ஹெம் பண்ணனும். இப்ப நாம ஸ்லீவ் அட்டாச் பண்ணி அதைஹெம் பண்ணிட்டோம்.




**ஸ்டெப் 6 ஸ்கர்ட் போர்ஷன் உருவாக்குதல்**




இப்ப நாம ஸ்கர்ட் போர்ஷனை பாக்கலாம். இப்ப நம்பகிட்ட ஸ்கர்ட்டுக்கு ரெண்டு துணி பீசஸ் தயாரா இருக்கு. துணிய விரிங்க. டாப் டார்சோ போர்ஷன்ல துணிய அட்டாச் பண்ணுவோம். இதை ஸ்கர்ட் பீஸ்க்கு டாப்ல அட்டாச் பண்றதுக்கு முன்னால அதுல கேதரிங் உருவாக்கணும். ஸ்கர்ட்டோட ரெண்டு பீசஸயும் மிஷினுக்கு கொண்டு வாங்க. கேதரிங்குக்கு உஷா ஜானோம் கேதரிங் ஃபூட் தேவைப்படும். ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ அன்ஸ்க்ரு பண்ணி கேதரிங் ஃபூட்-அ பொசிஷன்ல ஸ்க்ரூ பண்ணுங்க. மிஷினை நேர் தையலுக்கும் ஸ்டிச் நீளத்தை 4க்கும் செட் பண்ணிக்கொங்க. கேதரிங்குக்கு நூல் டென்ஷன அதிகபட்சமா செட் பண்ணிக்கணும், இந்த கேஸ்ல அது 9. பிரஸ்ஸர் ஃபூட்க்கு அடியில துணிய அலைன் பண்ணிகிட்டு ஸ்டார்ட்ட பிரஸ் பண்ணிட்டு இந்த நடக்கற மேஜிக்-அ பாருங்க. மிஷின் சரியான கேதரிங்கை உருவாக்கும். அடுத்த முனை வரை கேதர்ஸ் உருவாக்குங்க. இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணுங்க. ஸ்கர்ட்டோட இன்னொரு பீஸ்லயும் இதே கேதரிங் பிராசஸ ரிபீட் பண்ணுங்க. கேதர்ஸ் பாக்க இப்படித்தான் இருக்கணும். எவ்வளவு அழகா இருக்கு பாத்தீங்களா?















## ஸ்டெப் 7 ஸ்கர்ட் பீசஸ அப்பர் டார்சோவில் அட்டாச் செய்தல்

இப்ப நாம கேதரிங் செய்த துணிய ட்ரெஸ்சோட மேல் பகுதில அட்டாச் பண்ணனும். துணியின் ஒரு பீஸ எடுத்துட்டு அதை டாப் பீசோட பாட்டம் எட்ஜோட ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கற மாதிரி அலைன் பண்ணுங்க. இதை சரியான இடத்தில வைச்சுபின் பண்ணுங்க. இன்னொரு முனை வர்ற வரை பின் பண்ணிட்டே போங்க. துணியோட ரெண்டு பீஸசும் சரியா அலைன் ஆகி இருக்கிற உறுதி செய்துக்கணும். ஒரு பக்கம் முடிஞ்சதும், துணிய விரிச்சு இன்னொரு ஸ்கர்ட் போர்ஷனை டிரெஸ்சுக்கு பின்னால ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்கற மாதிரி வைச்சு பின் பண்ணலாம். இப்ப தைக்க தயாராகிட்டோம். நாம ஏற்கெனவே ஃபூட்-அ ரெகுலர் ஃபூட்டுக்கு மாத்தி மிஷினை நேர் தையலுக்கு செட் பண்ணியாச்சு. பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அலைன் பண்ணி தைக்க ஆரம்பிக்கணும். முழுத் தையலுக்கும் ரெண்டு துணியும் சரியா அலைன் பண்ணப்பட்டு இருக்கறதை உறுதி செய்துக்கங்க. முடியற இடத்துக்கு வந்ததும் நூலை கட் பண்ணுங்க. இன்னொரு சைட்டுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. துணிய அலைன் பண்ணிட்டு தையுங்க. நூலை கட் பண்ணுங்க. இப்ப பாருங்க நம்ப டார்சோ போர்ஷன் பாட்டமோட கனெக்ட் ஆகிருச்சு. தைச்சதும் அது பாக்க இப்படித்தான் இருக்கணும்.












## ஸ்டெப் 8 ஸ்லீவ்ஸ், ஜிப்பரோட சேர்த்து பாட்டம், சைட்ஸ் முடித்தல்.

நாம ஸ்லீவ்ஸ லேஸ் வெச்சு அழகு செய்வோம். ஒட்டுமொத்த ஸ்லீவ் நீளத்தையும் அளந்து அந்த அளவுக்கு லேஸ் கட் பண்ணிக்கொங்க. இதுல காட்டியிருக்க மாதிரி லேஸ ஸ்லீவ்ல பின் பண்ணுங்க. ரெண்டாவது ஸ்லீவ்லயும் இதே புரொசீஜரை ரிபீட் பண்ணுங்க. அளந்து வைச்ச லேஸ கட் பண்ணி பின் பண்ணுங்க.

இப்ப சைட் சீம் வேலைய பாப்போம். ஸ்லீவ்ஸ ரைட் சைட் ரைட் சைடை பாத்துட்டு இருக்க மாதிரி ஜாயின் பண்ணி ஆர்ம் ஹோலோட மேட்ச் பண்ணுங்க. ஆர்ம் ஹோலை பின் பண்ணுங்க. அடுத்து கீழ வெஸ்ட்லைனை மேட்ச் பண்ணி சரியான இடத்தில பின் பண்ணுங்க. மேற்கொண்டு சைட் சீம்-அ மாட்ச் பண்ணி டிரெஸ்சோட பாட்டம்-அ ரீச் பண்ற இடம்வரை பின் பண்ணுங்க. முதல் பக்கத்தை முடிச்சதும் இதே ஸ்டெப்பை இன்னொரு சைட்க்கும் ரிபீட் பண்ணுங்க.

ஆனா இந்த சைட்ல நாம ஜிப்பர் அட்டாச் பண்ணுவோம். இதுக்கு நாம 8 அங்குல கன்சீல்டட் ஜிப்பர யூஸ் பண்ணுவோம். ஆர்ம் ஹோல்லேந்து 1½ இன்ஞ்ச் மெஷர் பண்ணி சாக் எடுத்து ஒரு மார்க் கிரியேட் பண்ணுங்க. இந்த பாயின்ட் ஜிப்பரோட ஆரம்ப பாயின்டா இருக்கும். இப்ப ஜிப்பரோட இன்னொரு முனைல ஜிப்பர் என்ட்க்கு முன்னால 1 இன்ஞ்ச் மார்க் பண்ணிக்கணும். இந்த பாயின்ட்யும் சாக்கால மார்க் பண்ணிக்கங்க. இதுதான் ஓபனிங்கா இருக்கும். இப்ப ஜிப்-அ பின் பண்ணிறலாம்.






ஜிப்போட ரைட் சைட் டிரெஸ்சோட ரைட் சைட்ல வைக்கணும். இதுல காட்டியிருக்க மாதிரி ஜிப்போட ஒரு பக்கத்தை துணி அடிப்பகுதில பின் பண்ணுங்க. ஜிப்போட இன்னொரு பக்கத்தை டிரெஸ்சோட டாப் பீஸ்ல பின் பண்ணிறலாம், ரைட் சைட் ரைட் சைடை பாத்துட்டு இருக்க மாதிரி இருக்கணும். ஜிப்-அ ஓபன் பண்ணுங்க. பின் பண்ணின ஜிப் பாக்க இப்படித்தான் இருக்கணும்.




இப்ப தைக்க ஆரம்பிக்கலாம்





முதல்ல லேஸ்-அ தைக்கணும் அதனால லேசுக்கு பொருத்தமா நூல் நிறத்தை மாத்தணும். ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்ட மாத்தி பைப்பிங் ஃபூட்-அ அட்டாச் பண்ணிக்கணும். அப்புறம், பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு லேசோட ஒரு முனைலேந்து இன்னொரு முனைவரை தைக்க ஆரம்பிங்க. தையல் சரியா வர மிஷினை மெதுவான வேகத்துல வைக்கணும் . இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணிட்டு இதே பிராசஸ லேசோட இன்னொரு சைட்லயும் ரிபீட் பண்ணனும்.






ஸ்லீவோட ரெண்டு முனைகளையும் ஒன்னா ஜாயின் பண்ணனும் இதுக்கு லோசோட முனையிலிருந்து ஒருசில முத்துகளை ரிமூவ் பண்ணிருங்க. இது ஸ்லீவ சீம்லெசா தைக்க உதவும். பிரஸ்ஸர் ஃபூட்-அ ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-ஆ மாத்துங்க. ஸ்லீவோட ரெண்டு பக்கங்களையும் ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி ஜாயின் பண்ணுங்க. பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில வைச்சு தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்துல ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. ஸ்லீவ்லேந்து டிரெஸ்சோட பாட்டம் வரை தையுங்க. ஆர்ம்ஹோல் அப்புறம் கேதர்ஸ் வர்றப்ப வேகத்தை குறைச்சிட்டு முன், பின் பீசஸ் கரெக்டா ஒன்னா அலைன் ஆகியிருக்கான்னு உறுதி செய்துக்கங்க. இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. சைட் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப டிரெஸ்சோட இன்னொரு பக்கத்தை தைக்கணும்.

டரெஸ்சோட பாட்டம்ல தொடங்கி மேல்பக்கமா போங்க. ஜிப்பர் மார்க்குக்கு போன உடனே நிறுத்திட்டு ஒருசில ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. நூலை கட் பண்ணுங்க. மறுபடியும் தைக்க இன்னொரு மார்க்ல தைக்க ஆரம்பிச்சு ஸ்லீவோட முனைவரை தையுங்க. இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க.






அடுத்து ஜிப்பர் தைக்கணும். ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ ஜிப்பர் ஃபூட்-க்கு மாத்தணும். ஃபூட்-ன் வலது முனைய துணியோட அலைன் பண்ணுவோம். அதனால அதுக்கு ஏற்றாற்போல ஃபூட்-அ அட்டாச் பண்ணனும். ஃபூட்க்கு அடியில துணிய வைச்சு தைக்க ஆரம்பிக்கணும். தைச்சிட்டே பின்-அ ரிமூவ் பண்ணுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க.
ஜிப்-அ ஓபன் பண்ணி இன்னொரு பக்கத்தை தைக்கணும். பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. கடைசில வரை தையுங்க. ஜிப்புக்கான முதல் செட் தையல் முடிஞ்சிருச்சு. இப்ப ஜிப் டீத் பக்கத்தில ஸ்டிச் பண்ணனும். பூட்க்கு அடியில ஜிப்-அ வைச்சு தைக்க ஆரம்பிங்க. முடிஞ்சவரை டீத்-க்கு நெருக்கமா தையுங்க. சீரா தைச்சிட்டே போங்க உங்க தையல் நேரா இருக்கறதை உறுதிசெய்துக்கொங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிட்டு இதே பிராசஸ இன்னொரு பக்கத்துக்கும் ரிபீட் பண்ணுங்க. நீங்க தைச்ச ஜிப் தைச்சு முடிஞ்சதும் பாக்க இப்படித்தான் இருக்கணும்.







இங்க கடைசியா செய்ய வேண்டியது, ஜிப்போட லாக்-அ ஜிப்போட டாப்-அ அதன் முழு அகலத்தையும் தைச்சு லாக் பண்ணனும். மறுபடியும் ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு மாத்துங்க. பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில துணிய வைச்சு முழுவதும் தையுங்க. உங்க தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும்.


எம்பயர் டிரெஸ்ஸ திருப்பிப் போட்டு பாட்டம ஹெம் பண்ணனும். இதுல காட்டியிருக்க மாதிரி ரெண்டு தடவை ½ அங்குலம் மடிங்க. மடிப்பை பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில அலைன் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. பாட்டம் ஹெம் முழுக்க தையுங்க. பாட்டம்-அ தொடர்ந்து மடிச்சிட்டே தையல் நேர்த்தியா இருக்கிறதை உறுதி செய்துக்கணும். இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க.






லேஸ் டிரெஸ்சோட பாட்டம்லயும் இருக்கும். ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ மாத்திட்டு பைப்பிங் ஃபூட் அட்டாச் பண்ணனும். லேஸ டிரெஸ்சோட பாட்டம்ல வைச்சு தைக்க ஆரம்பிங்க. முனைய ஓபனா விட்டுட்டு நூலை கட் பண்ணிட்டு லேசோட இன்னொரு எட்ஜ்க்கு போங்க. அது முழுவதும் தையுங்க. முனைக்கு போன உடனே சுமார் ½ அங்குலம் மடிச்சு அதை லேஸ்க்கு மேல இதுல காட்டியிருக்க மாதிரி ஓவர்லாப் பண்ணுங்க. தேவைப்பட்டா முத்துகளை ரிமூவ் பண்ணிறணும். பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடில ஓவர்லாப்-அ வைச்சிட்டு தையுங்க. முனைகள்ல பிவோட்டிங் யூஸ் பண்ணுங்க. நூலை கட் பண்ணிருங்க அவ்ளோதான் முடிஞ்சிது.




இப்ப நாம நெக்லைன், வெய்ஸ்ட், ஸ்லீவ்ஸ், பாட்டம் ஹெம் அப்புறம் ஜிப்பர் முடிச்சாச்சு.



இதுரொம்ப ஈசிதானே? இப்ப உங்க எம்பயர் டிரெஸ் ரெடி. உங்க அடுத்த டின்னர் டேட்டுக்கு எதை உடுத்திக்கணும்னு இப்ப உங்களுக்கு தெரியும். அடுத்த என்ன பாக்க விரும்பறீங்கன்றத கீழ உள்ள கமென்ட்ஸ்ல சொல்லுங்க அப்புறம் இந்த வீடியோவ உங்க டைலர் நண்பர்களோட ஷேர் பண்ண மறக்காதீங்க.